# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 625/2018 |
| நாள் | 10.11.2025 |
| வா.சா.1 | அமிர்தலிங்கம் |
| வயது | 58 |
| ஊர் | மண்மங்கலம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். டெக்ஸ்டைல் நிறுவனத்தில் கூலி வேலையும் செய்கிறேன். என்னுடைய நிரந்தர முகவரி அப்பிபாளையம் ஆகும். என்னுடைய முகவரி அப்பிபாளையம் முதல் வீதியாகும். பிரதிவாதியை கடந்த 23 ஆண்டுகளாக எனக்கு தெரியும். பிரதிவாதி பானுமதி பத்திர அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார். பிரதிவாதியின் கணவர் பிஎஸ்என்எல் நிறுவனத்தில் பணியாற்றினார். பிரதிவாதியின் நிரந்தர முகவரி வடக்கு தாந்தோணிமலை, சுங்ககேட் முகவரியாகும். பிரதிவாதி தற்சமயம் மேற்படி முகவரியில் தான் வசித்து வருகிறார். பிரதிவாதி என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியும், அவரது கணவரும் அரசு ஊழியர்களாக பதவி வகித்த போது, அவர்கள் என்னிடத்தில் தாவா கடன் தொகையை கடனாக பெற வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடத்தில் குடும்ப அவசர தேவைக்கு தான் கடன் கேட்டார். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டிலும், வழக்குரையிலும் பிரதிவாதி வியாபார தேவைக்காகத்தான் கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடும்ப தேவைக்கு தான் கடன் கேட்டார். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பிரதிவாதி வியாபார செலவிற்காக கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், பிரதிவாதி அவரது அவசர குடும்ப தேவைக்காகத்தான் கடன்

கேட்டார். அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் சட்ட அறிவிப்பு கொடுத்தேன். நான் கொடுத்த சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு சார்வு செய்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர் சுக்காலியூர், பொதியம்பள்ளம் என்ற ஊரில் வசித்து வருகிறார். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை எழுதிய நபரும், சுக்காலியூர், பொதியம் பள்ளம் என்ற ஊரில் தான் வசித்து வருகிறார். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் எழுதியவரும், சாட்சியும் எனக்கு சிறுவயதில் இருந்தே தெரியும். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் தொகை நிரப்பபட்டுள்ள ரூ.3,10,000 என்ற இடத்தில் 3 என்ற எண் மட்டும் தனியாக சேர்க்கப்பட்டுள்ளதா என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் ரூ. 3,10,000 என்ற இடத்தில் 3 என்ற எண் மட்டும் தனியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தவில்லை. எனக்கு வருமான வரி செலுத்தும் அடையாள அட்டை இல்லை. நான் வசித்து வரும் இடத்திற்கும், பிரதிவாதி குடியிருந்து வரும் இடத்திற்கும் சுமார் 8 கி.மீ துாரம் இருக்கும். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்று கொண்டதாக நான் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சட்ட அறிவிப்பை முறையாக பிரதிவாதிக்கு சார்வு செய்திருந்தால், பிரதிவாதி அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு சரியான பதில் சட்ட அறிவிப்பை கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு, என்னை யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கடந்த 09.08.2015 ம் தேதியன்றோ அல்லது வேறு தேதிகளிலோ என்னிடத்தில் எந்த கடன் தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கடந்த 09.08.2015 ம் தேதியன்றோ அல்லது வேறு

தேதிகளிலோ எந்தவொரு கடனுறுதிச்சீட்டையும் என் பெயருக்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ–1 கடனுறுதிச்சீட்டில்உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ–1 கடனுறுதிச்சீட்டை நானும், ஹரிஹரசுதன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து மோசடியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் என்பவரை பிரதிவாதிதான் அழைத்து வந்தார். வா.த.சா.ஆ–1 கடனுறுதிச்சீட்டில் Material alteration என்ற கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.